வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் செத்தால் கருவாடு என்பதால்தான், கருவாட்டுக்குக்கூட 5 சதவிகித ஜி.எஸ்.டி. வரி போட்டார்கள். அந்த 5 சதவிகித வரியைக்கூட இல்லாமல் செய்த அரசு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அணைக்கரை பகுதியில் உள்நாட்டு மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களைப் பதப்படுத்த குளிர்சாதனப் பெட்டி வசதி வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அது நியாயமான கோரிக்கை. நிச்சயமாக அரசு அதைக் கருத்தில்கொண்டு, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதியைப் பொறுத்தவரையில், நம்முடைய மாவட்ட அமைச்சர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். எனவே, அவர்கள் சிறு தொழில் மூலமாகக்கூட அங்கே அந்த ஐஸ் கட்டி நிலையத்தை அமைப்பது தொடர்பாக அவருடைய மானியக் கோரிக்கையில் தகவல் அளிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

146—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***6874—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூன் 7]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த தெய்வம், முத்தமிழ்த் தலைவி, அம்மா அவர்களை வணங்குகிறேன். அதேபோல், தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், அவருக்குத் துணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஜெயங்கொண்டத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்பட்டது. அதுமுதல் இதுநாள் வரையில் அந்த நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட சார்பு நீதிமன்றம் மற்றும் கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நமது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதுவும் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதேபோல, JLPP, ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்காக எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்குகின்ற சார்பு நீதிமன்றங்களும் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. எனவே, இந்த 5 நீதிமன்றங்களும் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருவதால், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக கடந்த 2012 ஆம் ஆண்டு ஒரு பரிந்துரை பெறப்பட்டது. ஆனால், அங்கிருக்கின்ற வழக்கறிஞர்கள் சங்கம், அந்த இடம் போதுமானதாக இல்லை என்றும், வேறு இடத்துக்கு மாற்றி அந்தக் கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்றும் அரசுக்குக் கோரிக்கை வைத்ததன் காரணமாக, சென்னை உயர் நீதிமன்றம் அதைப் பரிசீலனை செய்து, மீண்டும் வேறு இடம் தேர்வு செய்து, திருத்திய மதிப்பீட்டை அரசு அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அங்கே வேறு இடம் தேர்வு செய்யப்பட்டு, 22.25 கோடி ரூபாயிலே அங்கு ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்காக ஒரு பரிந்துரை உயர் நீதிமன்றத்திடமிருந்து அரசுக்கு வரப்பெற்றிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, விரைவிலே அங்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ.22.25 கோடியிலே நீதிமன்ற வளாகம் கட்டுவது குறித்து பரிசீலனையில் உள்ளதாகவும், அதற்கான estimate வரப்பெற்றுள்ளதாகவும் அறிவித்துள்ளார். எனவே, அதை விரைந்து முடித்து, இந்த ஆண்டே தமிழக முதல்வர் மற்றும் தமிழக துணை முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியைக் கொடுக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 7]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மிக விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று, விரைவிலே அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான நடவடிக்கை இந்த ஆண்டே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகவை 95-ல் அடியெடுத்து வைத்திருக்கும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களையும், ஓய்வறியா சூரியன் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.*

பரமத்தி-வேலூர் தொகுதியிலே குற்றவியல் நீதிமன்றம் மிகப் பழமையான கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதேபோன்று, உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் ஆகிய இரண்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஏற்கெனவே இடமும் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அந்த இடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ஏற்படுத்தி, கட்டடங்களை விரைவில் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கின்றார். அப்படி இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கும்பட்சத்திலே, அந்த மாவட்ட நீதிமன்ற நீதிபதியின்மூலம், அங்கிருக்கின்ற பொதுப் பணித் துறையினரால், அந்த இடத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை அரசுக்கு வந்தவுடனே, அங்கு ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*